**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.30/2023** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 1** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | செல்லப்பாப்பு | **W/o. :** | பூராசாமி |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **02.04.2025**

**1 முதல் 5 எதிரிகள் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் நொச்சிக்குளத்தை சேர்ந்தவர். விவசாய தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 5 – 6 வருடங்களுக்கு முன்பு நொச்சிக்குளம் மேற்கு பகுதியில் அப்பாதுரை என்பவர் காட்டில் அவருக்கும் ஆறுமுக வகையறாவுக்கும் பாதைத்தகராறு நடந்தது. அப்போது காலை 8.30 மணி இருக்கும். காட்டுக்கு உள்ளே தகராறு நடந்தது நான் அருகில் சென்று பார்க்கவில்லை. வெளியே நின்று பார்த்துவிட்டு போய்விட்டேன். அதன் பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

எங்கள் ஊரை சேர்ந்த லட்சுமணன் மகன் அப்பாதுரை என்பருக்கும் முத்துசாமி மகன் ஆறுமுகம் என்பருக்கும் நிலம் பிரச்சனை சம்பந்தமாக கடந்த 23.12.2015 ந் தேதி

காலை 11.30 மணியளவில் நான் எனக்கு தெரிந்த செல்லதுரை, சக்திவேல் ஆகியோர்களுடன் எனது பருத்தி வயலுக்கு தண்ணீர் பாய்ச்ச செல்லும்போது அப்பாதுரை நிலத்தில் சத்தம் கேட்டு நாங்கள் போய் பார்த்த போது எங்கள் ஊரை சேர்ந்த முத்துசாமி மகன் ஆறுமுகம், ஆறுமுகம் மகன் தர்மராஜ், பழனிமுத்து மகன் பெரியசாமி, மாரிமுத்து மகன் மாயக்கிருஷ்ணன், சின்னதம்பி மகன் அறிவழகன், செல்லமுத்து மகன் ராஜாங்கம், ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து அப்பாதுரை நிலத்தில் கம்பிவேலியை பிடுங்கி எறிந்துவிட்டு வேலி கல்லை உடைத்து தூக்கி போட்டுவிட்டு பாதையை மண் வெட்டி கொண்டு நிரவி கொண்டுஇருந்தனர் என்றும், அதை பார்த்த நாங்கள் நமக்கு வம்பு எதற்கு என்று என்னோடு வந்தவர்களை அழைத்துக் கொண்டு வயலுக்கு சென்று விட்டேன் என்றும், பின்னர் இது சம்பந்தமாக 24.12.2015ந் தேதி காலை அப்பாதுரை, ஆறுமுகம் வீட்டிற்கு சென்று கேட்டபோது ஆறுமுகம் அப்பாதுரையை பார்த்து அப்படிதான்டா செய்வேன் தேவடியா பயலே என் மயிரை கூட பிடுங்கமுடியாது நீ ராத்திரி கொல்லை பக்கம் வந்திருந்தா உன்னை கத்தியாலே குத்தி கொலை பண்ணிருப்பேன் என்று கத்தியை காட்டி மிரட்டினார் என்றும், பின்னர் அப்பாதுரை போய் போலீசில் கேஸ் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு போனார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு சொந்தக்காரர்கள் என்பதால் அவருக்கு சாதகமாக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.